Koviloor Digital Library

உ

3/5

கந்தர் சஷ்டி கவசம்

(தெளிவுரையுடன்)

ACC.NO.
24197

அன்னபூர்ணா பதிப்பகம்
திருப்பனந்தாள் - 612504

Koviloor Digital Library

Koviloor Digital Library

3-5

உ

தேவராய சுவாமிகள் இயற்றிய

கந்தர் சஷ்டி கவசம்

(தெளிவுரையுடன்)

"அருள் நெறித் தொண்டர்"
...புமணி
பிளாட்சி இல்லம்,
25, ... வீதி, முத்துப்பட்டணம்,
காரைக்குடி-630 001.
கைபேசி: 9445436817

தெளிவுரையாசிரியர் :

வித்துவான் கா. ம. கண்ணப்பன், எம். ஏ.,



வெளியீடு :

அன்னபூர்ணா பதிப்பகம்
திருப்பனந்தாள் – 612 504.

Koviloor Digital Library

முதற்பதிப்பு :
இரக்தாக்ஷி – ஆவணி – 1984.

விலை ரூ. 1—00.

தெளிவுரை :
வித்துவான் கா. ம. கண்ணப்பன், எம். ஏ.,
தருமபுரம்.

விற்பனை உரிமை :
ம. வே. சுவாமிநாதன்.
உரிமையாளர்,
அன்னபூர்ண பதிப்பகம்,
7, சன்னிதித்தெரு,
திருப்பனந்தாள் - 612 504.

அச்சகம் :
ஞானசம்பந்தம் அச்சகம்,
தருமபுரம் – மயிலாடுதுறை 609 001.

Koviloor Digital Library

பதிப்புரை

உலகம் நலம்பெற முருகக்கடவுள் மீது ஆன்றோர் பலர் கந்தர் சஷ்டி கவசம், கந்தர்கலி வெண்பா, கந்தபுராணம், கந்தர் அனுபூதி, கந்தர் அலங்காரம், திருப்புகழ், திருமுருகாற்றுப்படை என்று பல பாராயண நூல்களை யாத்திருக்கிறார்கள். அவைகளில் குறிப்பிடத்தக்க இடம் வகிக்கும் பாராயணநூல் கந்தர் சஷ்டி கவசமாகும்.

ஸ்ரீ தேவராய சுவாமிகள் இயற்றிய இத் தோத்திரநூல், 238 அடிகள் கொண்ட நிலை மண்டில ஆசிரியப்பாவால் ஆகியது. அடியார்கள், தம்மைக்காக்குமாறு முருகப் பெருமானிடம் வேண்டி, முருகப்பெருமானுக்குரிய சஷ்டி நாளில் சிறப்பாகப் பாராயணம் செய்யத்தக்க நூல். "கவசம்" என்னும் சொல் பகைவர்கள், ஆயுதம் முதலியவற்றால் தாக்கும்போது, துன்பம் நேராதபடி காப்பாற்றக் கூடிய மார்பில் அணியும் இரும்பு உறையைக் குறிக்கும். இந்தநூல், கவசம் போலப் பாராயணம் செய்வோர்க்குப் பாதுகாப்புத் தரவல்லது; ஆதலால், 'கந்தர் சஷ்டி கவசம்' என்னும் பெயர் உடையதாயிற்று.

யாதுமொன்றறியா என்னை வாழ்விக்க வேண்டி எளியேற்குப் பணியருளியும் அன்னபூர்ண பதிப்பக வெளியீட்டுப்பணி, விற்பனைப் பணிகளைத் தொடர்ந்து செய்ய அனுமதித்தும் அருள்பாலித்த **தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்** அவர்களுக்கு மனம்

Koviloor Digital Library

மொழி, மெய்களால் ஆகிய வந்தனை வழிபாடுகளைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னை இடையருதுவாழ்விக்கும் வள்ளல், பெங்களூர் வெங்கடேசா கல்விச்சங்கத்து நிறுவனர் - செயலர் - தாளாளர் ஆகிய உயர்திரு **ம. வே. ஜெயராமன்** அவர்களின் திருவடிகள் என் தலைமேலன.

இந்த நூலுக்குப் பல உரைகள் உண்டு, இப்பொழுது இந்நூலுக்கு உரை எழுதியிருப்பவர், தருமபுர ஆதீனம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர் வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன் எம். ஏ., ஆவார். இவர்க்கு மனமார்ந்த நன்றி.

அன்பர்கள் இந்நூலைப்பெற்றுஓதி முருகன்திருவருளைப் பெற்று உய்க! வணக்கம்.

அன்பன்,

7, சன்னிதித்தெரு,
திருப்பனந்தாள்.
அ.கு.எ. - 612504

ம. வே. சுவாமிநாதன்

பதிப்பாசிரியர்.

(18—8—1984)

Koviloor Digital Library

உ

சிவமயம்

கந்தர் சஷ்டி கவசம்

காப்பு

அமரரிடர் தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

துதிப்போர்க்குவல்வினைபோம்துன்பம்போம்நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் — கதித்தோங்கும்
நிட்டையுங்கை கூடும் நிமலரருள் கந்தர்
சட்டி கவசந் தனை.

நூல்

சட்டியை நோக்கச் சரவண பவனார்
சிட்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மைய நடஞ்செயும் மயில்வா கனனார்

கையில்வே லாலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக

Koviloor Digital Library

வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக

சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவ வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறென

வசர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசஅங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க

விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியும் சவ்வும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்

சண்முகன் றீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்

Koviloor Digital Library

நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈரறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ டணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்

முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை அழகும் இணைமுழந் தாளும்

திருவடி யதனில் சிலம்பொலி முழங்கச்
செககண செககண செக்கண செகண
மொகமொகமொகமொகமொகமொக மொகென
நக்நக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண

ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து

முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென் (று)

Koviloor Digital Library

உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க

பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டு கண்ணினைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க

முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்ன வடிவேல் காக்க

சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க

வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி இரண்டும் அயில்வேல் காக்க
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க

Koviloor Digital Library

வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியிணை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க

முன்கை இரண்டும் முரண்வேல் காக்க
பின்கை இரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க

எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க

ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க

பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்

Koviloor Digital Library

கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராக் கதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லினும் இருட்டிலும்எதிர்படும் அண்ணரும்

கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளங்களும்
என்பெயர் சொலவும் இடிவிழுந் தோடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்

பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியப் பாவையும் ஒட்டியச் செருக்கும்

காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டால் கலங்கிட

அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால்கை முறியக்

Koviloor Digital Library

கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு முழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில்செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்

பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந் தோடத்

தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுடன் இறங்க
ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்

சூலைசயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருஅரை யாப்பும்

எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீஎனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்

Koviloor Digital Library

உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரஹண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரா வதியைக்

காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா

கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே

காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை

நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புடன் இரக்ஷி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்

Koviloor Digital Library

சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்

வாழ்க வாழ்க வாரணத் துவசன்
வாழ்க வாழ்கஎன் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செய்தால்
பெற்றவன் நீகுரு பொறுப்ப துன்கடன்

பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரியம் அளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சட்டி கவசம் விரும்பிய

பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கம் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சட்டி கவச மிதனைச்

சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய
அட்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்னர் எண்மர் சேர்ந்தங் கருளுவர்

Koviloor Digital Library

மாற்றலர் எல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை அளித்திடும்
நவமதன் எனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டா வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை

வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியால் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி

அறிந்தென துள்ளம் அட்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினில் இருக்கும்

சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி

திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே

மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரஹண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

கந்தர் சஷ்டி கவசம் முற்றிற்று.

Koviloor Digital Library

"...நெறித் தொண்டர்"
...மணி
...பட்டணம்
காரை... -630 001.
...பேசி: 9445436817

கந்தர் சஷ்டி கவசம்

தெளிவுரை

காப்பு

நெஞ்சமே! தேவர்களின் துன்பம் நீங்கும்படி சூரபதுமன் முதலான அசுரர்களுடன் போர் புரிந்த குமரப்பெருமான் திருவடிகளைத் தியானித்து வழிபாடு செய்வாயாக.

நேரிசை வெண்பா

இயல்பாகவே குற்றங்களின் நீங்கிய சிவபெருமான் பெற்றெடுத்த கந்தரைப் பற்றிய சஷ்டிக் கவசத்தை (தற்காப்புத்தரும் இம் மந்திரத்தை) ஆசாரத்துடன் பாராயணம் செய்து முருகப்பெருமானைத் துதிப்பவர்களுக்குக் கொடிய பாவங்கள் நீங்கும்; துன்பங்கள் அகலும்; முருகப்பெருமானை மனத்தில் பதித்துத் தியானம் செய்யும் பக்தர்களுக்குச் செல்வங்கள் வந்து சேரும்; வந்த செல்வங்கள் அனைத்தும் பலவாகப் பெருகும்; மேலும் தம்மனத்தை இறைவனிடம் ஒருமுகமாகச் செலுத்தவல்ல நிஷ்டையும் கைகூடும்; யோக வலிமையும் உண்டாகும்.

நூல்

1–6 சஷ்டியை நோக்கச் ... ... என்று வந்து

சரவணப் பொய்கையில் அவதரித்த முருகனின்சஷ்டி கவசத்தைப் பாராயணம்செய்து, தியானிப்பேனாக. தனது அடியவர்களாகிய நல்லோருக்கு உபகாரம்செய்யும்சிவந்த கிரணங்களை வீசும் வேலாயுதத்தைத் தாங்கிய முருகன், தமது இரண்டு பாதங்களிலும் அணிந்த பலமணிகள் தைத்துக் கோக்கப்பெற்ற சதங்கை இசை பாடவும்

Koviloor Digital Library

'தண்டை' என்னும் ஆபரணம் ஆடவும் பார்ப்பவர் மன மகிழ்ச்சி கொள்ளும் வண்ணம் நடனமாடி வரும் மயில் வாகனம் கொண்ட பெருமான் என்முன் காட்சிதருவார். "முருகப் பெருமானே! கையில் கொண்டுள்ள வேலால் என்னைக் காப்பாற்றுக" என்று மகிழ்ச்சியுடன் வேண்டு வோமாக.

7–10 வரவர ... ... வடிவேல் வருகவருக.

வேல் என்னும் ஆயுதம் தாங்கியவரே! வருவீராக. மயில்மீது அமர்ந்த பெருமானே! வருக, வருக. இந்திரன், அக்னி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் என்னும் எட்டுத் திக்குப்பாலகர்களும் போற்றும் மந்திரசக்தி பொருந்திய கூர்மையான வேல் அடியேன் துன்பத்தைத் தீர்க்க வருவதாக; வருவதாக.

11–16 வாசவன் ... ... சடுதியில் வக.

(தெய்வயானை அம்மையாரைத் திருமணம் புரிந்து கொண்டமையால்) தேவேந்திரனின் மருமகனாக விளங்கு பவரே! வருவீராக. அன்பு பொருந்திய குறப்பெண்ணாகிய வள்ளியம்மையின் நினைவுகொண்டவரே! வருக. ஆறுமுகம் பொருந்தியதலைவரே! வருக. பகைவர்களைப் பொடியாக்கும் வேல் ஏந்தியவரே! அடியேனுக்கு நாள்தோறும் காட்சி அளிப்பீராக. சிராமலையில் கோயில் கொண்டு விளங்கும் வேலாயுதரே! உடனே என்மனத்தில்வந்துபொருந்துவீராக.

17–22 ரவண .... ஐயா வருக.

[இப்பகுதியில் மந்திரக்குறியீடுகள் அமைந்துள்ளன. பிழையில்லாமல் நிதானமாகப் பாராயணம் செய்ய வேண் டும் என்பர் பெரியோர். முருகன் ஆறெழுத்து மந்திரம் ஓம்

Koviloor Digital Library

'சரவணபவ' என்பது. இதனைச் 'சரஹணபவ' என்று கொண்டும் சில பதிப்புக்களில் அமைக்கப்பட்டுள்ளது. இதில் உள்ள எழுத்துக்களை முன்னும் பின்னும் மாற்றியும் பீஜாட்சரங்களோடு சேர்த்தும் அடுக்கியும் வேகங் கொடுத்தும் நூலாசிரியர் அமைத்துள்ளார்.] ரவணபவச......சரவ என்னும் மந்திரவடிவமாகவிளங்கும் வீரனே! உன்னுடைய திருப்பெயரைச் செபித்து நமஸ்கரிக்கிறேன். நிபவசரஹண என்னும் அட்சரங்களின் வடிவமாகவிளங்கும்பெருமானே! நீ நிற நிற என்னும் ஓசைவருமாறு மயில்மீதுஏறி வருக வருக. அசுரர் குலத்தை அழித்த தேவசேனுபதியே! எழுந்தருள்வீராக.

23–26 என்னை .... வேலோன் வருக.

அடிமையாகிய என்னை ஆட்சிசெய்யும் இளமை பொருந்திய முருகப்பெருமானே! பன்னிரண்டு கைகளில் வேல், அம்பு. வாள், சக்கரம், பாசம் (கயிறு), அபயம் என்னும் ஆறும் ஆறு வலக்கைகளிலும் வச்சிரம், வில், கேடயம், கோழிக்கொடி, அங்குசம், வரதம் என்னும் ஆறும் ஆறு இடக்கைகளிலும்கொண்டுஎழுந்தருளி வருக விசாலமான பன்னிரண்டு கண்களும் அருள்ஒளி வீச விரைவாக எழுந்தருளி வந்து அடியேனைக் காப்பாற்றுக. வேல் ஏந்திய பெருமானே! வருக.

27–33 ஐயும் ... ... தினம் வருக.

[27 முதல் 32 வரையுள்ள அடிகளில் பீஜாட்சரங்கள் கூறப்பட்டுள்ளன. மந்திரத்தின் பயனை அடைவதற்குப் பீஜாட்சரங்களுடன் உச்சரிக்கவேண்டும் என்பத விதி. இவைகளின் பொருளைக் குருமூலமாக உபதேசம் பெற்று அறியவேண்டும் வித்து எழுத்துக்கள் (பீஜாட்சரங்கள்) ஹைம், ஹ்லீம், ஸௌம் என்பன. ஆசிரியர் இவைகளை

Koviloor Digital Library

முறையே ஐ, கிலி, சௌ எனக்கொண்டு பலவிதமாக மாற்றி மாற்றிக் கூறியுள்ளார்.] ஐயும் கிலியும், முறைமையுடைய சௌவும் என்றும் உய்வதற்குக் காரணமான சௌவும் பிராணன் ஆகிய ஐயும் கிலியும் என்றும் கிலியும் சௌவும் விளங்குகின்ற சோதிவடிவமான ஐயும் என்றும் கூறப்படும் எழுத்துக்கள் நிலையாக என்முன் நாள்தோறும் தோன்றவேண்டும். சண்முகன் என்று சொல்லப்படும் பெயர் வடிவமும் நியும், தனியொளி பொருந்திய அனைத்துக்கும் மூலாதாரமான சிவபெருமான் மகனாகிய குகன் தினந்தோறும் அடியேனிடம் வந்தருள்க.

33–46 ஆறுமுகமும் ... ... முழங்க.

ஆறு திருமுகங்களும், அழகு பொருந்திய கிரீடங்கள் ஆறும், திருநீறு அணியப்பெற்ற நெற்றியும் நீண்டபுருவங்களும், பன்னிரண்டு கண்களும் பவளம்போன்ற சிவந்த திருவாயும், நெற்றியில் விளங்கும் நல்ல நெறியோடு செய்யப்பெற்ற நவமணிகளால் ஆகிய சுட்டியும், பன்னிரண்டு திருச்செவிகளில்விளங்கும் குண்டலங்களும், பன்னிரண்டு வலிமைபொருந்திய தோள்களிலும் அழகான மார்பிலும் பலவகைப்பட்ட ஆபரணங்களும் மதாணி எனப்படும் பதக்கமும் அணிந்துகொண்டு (எழுந்தருள்வீராக.) தேர்ந்து எடுக்கப்பட்ட நல்ல மணிகளைப்பொருத்திக் கட்டப்பெற்ற நவரத்தின மாலையும் மூன்று புரிகளாக விளங்கும் பூணூலும் முத்து ஆரமும் அணிந்த மார்பும் புகழ்ந்து பாடுதற்கு உரிய அழகுமிக்க திருவயிறும் கொப்பூழும் அசையும்படியான இடுப்பில் பிரகாசமாக ஒளிவீசும் பட்டாடையும் ஒன்பதுவகை மணிகள் பதிக்கப்பெற்ற நல்ல மார்புக்கவசமும் இரண்டு தொடைகளின் அழகும் இரண்டு முழந்தாள்களும் திருவடிகளில் சிலம்பின் ஒலியும் முழங்க (எழுந்தருள்வீராக.)

Koviloor Digital Library

47–56 செககண .... முந்து.

வானுலகத்திலிருந்து பூமிக்கு எழுந்தருளிப் பொருந்தி இருப்பவனே! பூமியில் பொருந்தியிருப்பவனே! பூமியில் பொருந்தியிருப்பவனே! [மொக மொக என்பது 'டிங்குகு' என்பதுவரை மந்திரஒலிக்குறிப்புக்கள்] எல்லாவற்றுக்கும் மூலமாக விளங்கும் விந்துவே! மயில் வாகனத்தில் வீற்றிருக்கும் நாதுவே! முருகன் ஆகிய வேளே! முற்படு - அடியேனுக்கு அருள்செய்ய முற்படு - முந்து.

57–64 என்றனை .... பாலனைக் காக்க.

அடியவனுகிய என்னைக் காப்பாற்றும் திருஏரகத்தில் (சுவாமிமலையில்) எழுந்தருளி விளங்கும் செல்வமே! உன் மகனுகிய அடியேன் வேண்டிக்கொள்ளும் வரங்களை மகிழ்ச்சியோடு அருள்வீராக. லாலா, லாலா, என்று பாடித் துதிக்கும் பெருமையும் லீலையாகிய திருவிளையாடல்களும் பொருந்திய விநோதமானவனே! என்று கூறித் துதித்து உன்னுடைய திருப்பாதங்களையே உறுதி தருபவை என்று நினைத்து வணங்கும் அடியேனுடைய தலையின்மீது நின் இரண்டு திருவடிகளை வைத்துத் திருவடி தீக்ஷைபுரிந்து காப்பாயாக. என்னுயிருக்கும் உயிராய் விளங்கும் இறைவனே! காத்து அருள்க. பன்னிரண்டு விழிகளாலும் அருட்பார்வை செலுத்தி மகனுகிய என்னைக் காப்பீராக.

65–68 அடியேன் .... வேலவர் காக்க

அடியவனுகிய என் முகத்தினை அழகு பொருந்திய தேவரீருடைய வேல்காப்பதாக. விபூதி பூசப்பட்ட நெற்றியைப் புனிதத்தன்மையுடைய வேல் காப்பதாக. இரண்டு கண்களையும் ஒளிவீசும் வேல் காப்பதாக. பிரமனுல் விதிக்கப்பட்ட காதுகள் இரண்டையும் வேலாயுதத்தையுடையவரே! காப்பீராக.

Koviloor Digital Library

69–72 நாசிகள் ... ... செவ்வேல் காக்க.

மூக்கின் துவாரங்கள் இரண்டையும் நன்மை செய்யும் வேல் காப்பதாக. உன் புகழையே இதுவரை பேசிய வாயைப் பெருமை பொருந்திய வேல்காப்பதாக. முப்பத்திரண்டு பற்களையும், கூர்மையான முனையையுடைய வேல் காப்பதாக. நின் துதிகளைச் சொல்லிய நாக்கைச் சிறப்பு மிக்க வேல் காப்பதாக.

73–76 கன்னம ... ... திருவேல் காக்க.

இரண்டு கன்னங்களையும் ஒளிபொருந்திய வேல் காப்பதாக. அடியனாகிய என்னுடைய இளமையான கழுத்தை இனிமை பொருந்திய வேல் காப்பதாக. மார்பை மணிகள் பதிக்கப்பட்ட கூர்மையான வேல் காப்பதாக. ஒன்றோடு ஒன்று நெருங்கிய இளமை பொருந்திய முலைகள் பொருந்திய மார்பினைத் திருவேல் காப்பதாக.

77–80 வடிவேல் ... ... பருவேல் காக்க.

கூர்மையான வேல் இரண்டு தோள்களையும் வளப்பம் அடையும்படி காப்பதாக. இரண்டு பிடர்களையும் பெருமை மிக்க வேல் காப்பதாக. முதுகுப்பகுதியை அழகுடன் கூடியதாகிய அருள் பொருந்திய வேல் காப்பதாக. விலாவில் அமைந்துள்ள பதினாறு எலும்புகளையும் பருத்த வேல் காப்பதாக.

81–84 வெற்றிவேல் ... . அயில்வேல்.

வெற்றியையுடையவேல், வயிற்றைப்பிணி இல்லாமல் நன்கு விளங்கும்படி காப்பதாக. சிறிய இடை அழகாக இருக்கும்படி சிறப்புமிக்க வேல் காப்பதாக. கரு உற்பத்தி யாவதற்குக் காரணமாக உதவும் நரம்பாகிய கயிற்றை

Koviloor Digital Library

நன்மை உண்டாக்கும் வேல்காப்பதாக. ஆண் குறியாகிய இரண்டு பீஜங்களையும் கூர்மை பொருந்திய வேல் காப்பதாக. (84 ஆம் வரி " ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க " என்று சிலப்திப்புக்களில் காணப்படுகிறது.)

85–88 பிட்டம் ... ... கதிர்வேல் காக்க.

இரண்டு பிட்டங்களையும் (முதுகின் – இடையின் – கீழ்பகுதி) பெரியவேல் காப்பதாக. வட்டமான சுருங்கு தசையாலான ஆசனவாயிலை வலிமைமிக்க வேல் காப்பதாக. பருத்துத்திரண்ட இரண்டு தொடைகளையும் பெரிய வேல் காப்பதாக. கணைக்கால் இரண்டையும், முழந்தாள் இரண்டையும் ஒளிபொருந்திய நின் திருக்கைவேல் காப்பதாக.

89–93 ஐவிரல் ... ... நற்றுணையாக.

ஒவ்வொன்றிலும் ஐந்துவிரல்களைக்கொண்ட இரண்டு கால்களையும் கருணைமிக்க வேல் காப்பதாக. முன்கைகள் இரண்டினையும் போர் செய்யும் ஆற்றலுடைய வேல் காப்பதாக. பின்கைகள் இரண்டிலும் இளையவளாகிய இலக்குமி தங்குமாறும், அடியேனுடைய நாக்கில்சரஸ்வதி நல்ல துணையாகப் பொருந்துமாறும் அருள்செய்க.

94–96 நாபிக்கமலம் ... ... எதிர்வேல் காக்க.

தாமரை போன்ற கொப்பூழை நல்ல வேல் காப்பதாக. மூன்று விதமாகப் பிரித்துப் பேசப்படும் நாடிகளைக் கூர்மையான, முனையையுடைய வேல் காப்பதாக. அடியேன் எப்போதும் தளர்ச்சி அடையாதபடி பகை வரை எதிர்க்கும் வேல் காப்பதாக.

Koviloor Digital Library

97–102 அடியேன் ... ... சதுர்வேல் காக்க.

அடியவனாகிய என்னுடைய சொல்லில் தடைஏற்படும் காலத்தில் மிகவிரைவாக வந்து பொன்வேல் காப்பதாக. நாள்தோறும் வரும் பகல் பொழுதில் வயிரம் பதிக்கப் பெற்றவேல் காப்பதாக. பாதி இரவுப் பொழுதிலும் அந்த வேலே காப்பதாக. முன்னிரவுக் காலத்திலும் நடுஇரவுப் பொழுதும் தாமதம் ஏற்படாமல் உடனே வந்து திறமை மிக்க வேல் காப்பதாக.

103–106 காக்க .... பாவம் பொடிபட.

காப்பதாக; காப்பதாக; பொன்வேல் அடியேனைக் காப்பதாக. நோக்குவதாக; நோக்குவதாக; ஒருநொடியில் அடியேனைக் காப்பதற்காக நோக்குவதாக. வாழ்க்கையில் தடங்கல் ஏற்படாதபடி தடைகளை வேல்தாக்குவதாக. பாவங்கள் எல்லாம் தூளாகும்படி அதனைக் கோபங் கொண்டுபார்ப்பதாக; பார்ப்பதாக.

107–114 பில்லிசூனியம் ... ... துன்பசேனையும்.

பகைவர்கள், மாந்திரீகர்களைக் கொண்டு ஏவிவிடும் பில்லிஎன்னும்பேயும்துன்பங்களைஉண்டாக்கிக்கொல்லும் தன்மையுடைய (சூனியம் என்னும்) மாரண வித்தையும் பெரிய பகையும்நீங்குவதற்கு (அருள்புரிக.) வலிமைமிக்க பூதங்களும் பெரும்பலம்பொருந்திய பிசாசுகளும், மந்திரங் களுக்குக்கட்டுப்படாத துன்பம்தரும்பேய்களும் குழந்தை களை உணவாகக் கொள்ளும் பொருட்டு வீட்டின் பின்புற வாயிலில்காத்துக்கிடக்கும் முனிகளும், வாயில்நெருப்பினை யுடைய பிசாசுகளும், குள்ளமான உருவத்தையுடைய பேய்களும், பெண்களைத் தொடர்ந்து சென்று பிடித்துக் கொண்டு துன்பம் செய்யும் ' பிரமராட்சம் ' என்னும் பேய்

Koviloor Digital Library

களும் இரிசி என்று சொல்லப்படும் ருதுவாகும் தன்மை இல்லாத பெண்வடிவமுடைய பேய்களும், காட்டேரி என்று கூறப்படும் துஷ்டப்பேயும் ஆகிய இத்தகைய துன்பப்பேய்கள் அடியேனைக் கண்டமாத்திரத்தில் பயந்து கூச்சலிட்டுக் கலக்கம் அடைந்து ஓடுமாறு (அருள்புரிய வேண்டுகிறேன்.)

115–120 எல்லினும் ... ... அரும்பாவைகளும்.

பகற்பொழுதிலும் இரவுப்பொழுதிலும்எதிரேதோன்றித் துன்பப்படுத்தும் அண்ணர்கள்என்று கூறப்படும்தேவதை களும் அதிக அளவுபூசைகளை ஏற்றுக்கொள்ளும் காளியும், காளியைச் சேர்ந்த படைகளாகிய பல தேவதைகளும், ஆங்காரம் உடைய பூதங்களும், இன்னும் பலவாக உள்ள பேய்களும் பல்லக்கில் (தண்டி) ஏறிப் பவனிவரக்கூடிய பேய்களும் கீழான தன்மைகள் பொருந்திய பேய்களும் பிறருக்கு மரணம் சம்பவிக்கவேண்டும் என்பதற்காக மந்திரம் செய்து யானைநிற்கும் இடத்தில் அதன் அடியின் கீழேபுதைக்கப்பட்ட அருமையான மாவினால்ஆனபொம் மைகளும் (படிவங்கள்) அடியேனது பெயரைக் கூறிய உடனே அவைகளின் மேலே இடிவிழுந்து பயந்து ஓடிட (அருள்புரிய வேண்டுகிறேன்.)

121–128 பூனைமயிரும் ... ... குலைந்திட.

காட்டுப் பூனையின் மயிர், தலைப்பிள்ளைகளின் எலும்பு, பெருவிரலின் நகம், நீண்ட ரோமங்களையுடைய மண்டை ஓடு என்பவைகளைப் பல பதுமைகளுடன் மந்திரம்செய்து பிறரை அழிப்பதற்காகப் புதைத்துவைத்த வஞ்சனையான வைகளையும் என் பகைவர் கற்றுவைத்திருக்கும் மந்திர நூலாகிய ‘ ஒட்டியம் ’ என்பதை அறிந்ததால் உண்டாகிய

Koviloor Digital Library

கருவத்தையும், ஒட்டியம் என்ற அந்தநூலில் கூறப்பட்டுள்ளபதுமையும், பேய்களுக்குத் தட்சணையாக வைக்கப்பட்டசோறும், மந்திர மையும் பைத்தியம் பிடித்துத்தானே அலைந்து திரியும்படி செய்யும்செயலும் முதலியவை அடியேனைக் கண்டால் உருக்குலைந்து கலங்கி ஓடிட (அருள் புரிய வேண்டுகிறேன்.)

129–134 மாற்ருன் .... கதறிடக் கட்டு.

பகைவரும் வஞ்சனைகள் செய்பவரும் எமதூதரும் என்னைக்கண்ட மாத்திரத்தில் பயந்து திடுக்கிட்டுவந்து வணங்கவும், அஞ்சிநடுங்கவும், பிரமிப்பு அடைந்து கீழே விழுந்துபுரளவும், வாய்திறந்து கதறி புத்தி பேதலித்து ஓடவும், பூமியில்மோதிக்கொள்ளவும், பேய்கள், பூதங்கள் முதலியவைகளையும்பகைவர்களையும்பாசக்கயிறுகொண்டு கட்டுக. அங்கங்கள் ஒவ்வொன்றும் கதறி அழும்படி உடனே கட்டுவீராக.

135–138 கட்டி .... செதிற்செதிலாக.

கைகளும் கால்களும் முறியும்படியும் கதறும்படியும் கட்டுக; கட்டுக; கட்டுக. அப்படிக் கட்டிக் கீழே உருட்டி விடுவீராக. கண்கள்பிதுங்கிவருந்தும்படிமோதுக;மோதுக; செதிற்செதிலாக விழும்படி கொல்க; கொல்க.

139–142 சொக்கு .... தணலதுவாக.

சொக்கவைப்பவனே! அழகானவனே! சூரனுக்குப் பகைவனாகிய அழகனே! கூர்மைபொருந்திய வடிவேலால் அவைகளைக்குத்துக; குத்துக; கையால் பிடித்துக்கொள்க! பிடித்துக்கொள்க. சூரியனிடம் பொருந்தியுள்ள எரியும் நெருப்புக்கொண்டு எரித்திடுக. அவைகள் அந்த நெருப்பில் நெருப்பாகிவிடும் வண்ணம் எரித்திடுக; தணலால் எரிப்பீராக; தணலால் எரிப்பீராக.

Koviloor Digital Library

143–148 விடுவிடு ... . எளிதுடன் இறங்க.

உன் அடியார்களைத் தாக்குதற்குவரும் புலி பயந்து ஓடவும், பெரிய நரிகளும், குள்ளநரிகளும், நாய்களும், எலிகள், கரடிகள் ஆகியனவும் இனிமேல்பயந்து ஒன்றைத் தொடர்ந்து மற்றொன்றாக ஓடவும், தேள், பாம்பு செய்யான், பூரான்முதலிய மிக்கவிஷம் பொருந்தியஜந்துக் கள், அவைகள் தீண்டியதால் உடலின் மேல்பகுதியாகிய மண்டைவரை ஏறியவிஷங்கள் உடனே எளிதாக இறங்க வும்நின்வேலை விரைவாக அவற்றின்மீது விடுக; விடுக. (145, 146 ஆம் வரிகள் சிலபதிப்புக்களில் 'புலியும் நரிவயப் போத்தொடு நாயும்' 'எலியும் கரடியும் இனித்தொடா தோட' என்று காணப்படுகிறது. 148 ஆம் வரியில் 'எளிதி னில் இறங்க' என்று காணப்படுகிறது.) விலங்கு, விஷ ஜந்துக்களால் உண்டாகும் தீமையை நீக்குக என்பதாம்.

149–157 ஒளிப்பும் ... . நீயெனக்கருள்வாய்.

கண்மறைப்பு நோயும், நரம்புகள் சுளுக்கிக் கொள் வதும், ஒருபக்கத்தலைவலியும். வாதநோயும், குளிர்நோயும் கால்கை வலிப்புநோயும், பித்த நோயும், சூலைவியாதியும், க்ஷயரோகமும், குன்மநோயும், சோர்வு உண்டாக்கும் சிரங்குவியாதியும், கை, கால்குடைச்சலும், சிலந்திநோயும், குடலில் தோன்றும் விப்புரிதி என்னும் வியாதியும், விலாப் பக்கங்களில் தோன்றும பிளவைநோயும், பரவும் தன்மை கொண்ட தொடைவாழை என்னும் நோயும், கரப்பான் நோயும், படுவன் என்னும் நோயும், கைகளிலும் கால் களிலும் வரும் சிலந்திநோயும், பல்குத்தல், பல்லரணை, பெரிதாகத் தோன்றும் அரையாப்பு என்னும் கட்டிநோய் முதலிய எல்லாவிதமான கொடுமையான வியாதிகளும் அடியேனைக்கண்ட உடனே நிற்காமல் ஓடுவதற்கு அருள்செய்து காப்பாயாக.

Koviloor Digital Library

158–161 ஈரேழுலகமும் ... ... உன்திருநாமம்.

பதினான்கு உலகங்களும் எனக்கு உறவுடையதாய் இருக்கவும் ஆண்கள், பெண்கள் ஆகியஎல்லா மக்களும்' பூமியை அரசாட்சி செய்யும் அரசர்களும் மகிழ்வோடு எனக்கு உறவினராகவும், எனக்கு உதவவும், உன்னைத் துதித்து உன் நாமம்கூறிப் போற்றவும், (அருள்புரிவாயாக.)

162–166 சரஹண .... சிறை விடுத்தாய்.

சரவணப் பொய்கையில் தோன்றியவனே ! மலைகளை இருப்பிடமாகக் கொண்டு அருள்செய்யும் ஒளிமயமான கடவுளே! முப்புரங்களை அழித்தசிவபெருமானைஒத்தவனே! விளங்கும் பிரகாசமாக இருப்பவனே ! பரிபுரம் என்னும் பாதகிண்கிணியை அணிந்தவனே ! உயிர்களின் பாவங்களை ஒழிப்பவனே! திருமாலுக்கு மருமகனே ! தேவர்கள் உன்னையும் உன் திருநாமத்தையும் தோத்திரம் செய்து வேண்டிக்கொண்டதால் சூரசம்ஹாரம் செய்து அமராவதி நகரத்தைக் காத்துத் தேவர்களையும் சிறையிலிருந்து விடுதலை செய்தாய்.

167–172 கந்தா ... ... பாலகுமாரா.

கந்தனே ! குகனே ! ஒளிவீசும் வேலாயுதனே ! கார்த்திகைப் பெண்கள் அறுவர்வளர்த்த மகனே! கடப்ப மாலை தரித்தவனே ! கடம்பன் இடும்பன் ஆகியோரை அழித்த இனிய வேலினைஏந்திய முருகனே !திருத்தணிகை மலையில் எழுந்தருளியவனே ! சங்கரனுடைய புதல்வனே! கதிர்காமம் என்னும் ஈழநாட்டுத்தலத்தில் எழுந்தருளிஒளி வீசும் வேல் ஆயுதம் தாங்கிய முருகனே ! பழனி என்னும் தலத்தில் வாழ்கின்ற பால பருவத்தினையுடைய குமரப் பெருமானே !

Koviloor Digital Library

173–177 ஆவினன்குடி ... . யானுனைப்பாட.

திரு ஆவினன் குடியில் எழுந்தருளியிருக்கும் அழகான வேலாயுதத்தை உடையவனே! திருச்செந்தூரில் அமைந்த சிறந்த மலையில் வீற்றிருக்கும் செங்கல்வராயன் என்ற திருப்பெயர் கொண்டவனே! சமராபுரி என்னும் தலத்தில் வாழும் ஆறுமுகங்களைக்கொண்ட அரசனே! கருமையான கூந்தலையுடைய சரஸ்வதி என்னுடைய நாவில் பொருந்த அடியேன் நின் புகழ் பாடுகின்றேன்.

178–186 எனைத்தொடர்ந்து .... சிறப்புடன் வாழ்க.

என்னை ஒருபொழுதும் விடாமல் பற்றிக் கொண்டு இருக்கும் என் தந்தையாகிய முருகன் என்னும் உன்னைப் புகழ்ந்து பாடினேன்; ஆடினேன்; ஆடினேன். திரு ஆவினன் குடிப்பெருமானாகிய உன்னை எண்ணி விபூதியை விருப்பத்துடன் பூசிக்கொண்டேன். விபூதிபூசிக்கொண்ட தால் உலகபாசத்தால் ஏற்படும் செயல்களின் ஆசை நீங்கப்பெற்று உன் திருவடியை அடையவும் உன் திருவருள் அடியேனுக்கு உண்டாகவும், உணவும் பொன்னும் மேன்மேலும் உண்டாகவும் அன்புடன் இரட்சிப்பாயாக. வேலாயுதனாகிய உமது செல்வாக் கினால் அடியேன் சிறப்புக்கள் பலவும் அடையப்பெற்று வாழ்வேனாக.

187–192 வாழ்க வாழ்க .... வறுமைகள் நீங்க.

மயில் வாகனத்தை உடையவனே! வாழ்க; நின்னு டைய கூர்மையான வேலாயுதம் வாழ்க; மலைகளில் எழுந்தருளியிருக்கும் குருவே! வாழ்க; மலையில் வாழும் வேடுவர் குல வளர்ப்பு மகளாகிய வள்ளியம்மையுடன் வாழ்க; உன்னுடைய கோழிக்கொடிவாழ்க; என்னுடைய ஏழ்மை நீங்குவதாக.

Koviloor Digital Library

193–196 எத்தனை குறைகள் .... பெற்றவளாமே

முருகப்பெருமானே ! என்னைப்பெற்ற தந்தையாக விளங்குபவன் நீ. குருவாக விளங்குபவனும் நீயே. குறவர் குலப்பெண்ணாகிய வள்ளியே என்னைப்பெற்ற தாய் ; ஆகவே, எத்தனை குற்றங்களைச்செய்தபோதிலும் எவ்வளவு பிழைகளைச்செய்தபோதிலும் அவற்றைப் பொறுத்துக் கொண்டு என்மீது கருணைகாட்டுவது உன்கடமையாகும்·

197–200 பிள்ளை என்று ... . கவசம் விரும்பிய.

முருகனாகிய உனக்கு அடியேன் பிள்ளை என்பதால் அன்பையும் பிரியத்தையும் செலுத்தி, மைந்தனாகிய என் மீது மனமகிழ்ச்சி கொள்வதோடு. கந்தர் சஷ்டி கவச மாகிய இதனை விருப்பத்துடன் பாராயணம் செய்து உன்னையே அடைக்கலமாகக் கொண்டுள்ள அடியார்கள் செழிப்புடன் வாழ அருள் செய்வாயாக.

201–208 பாலன் .... நீறணிய.

முருகனின் பாலனாகிய, தேவராயன் என்னும் பெயர் கொண்ட யான் போற்றிக் கூறிய இத்துதியை – கந்தர் சஷ்டி கவசமாகிய இம் மந்திர நூலை – தினந்தோறும் காலையிலும் மாலையிலும் ஆசாரத்துடன், உடலைப் பரி சுத்தப்படுத்திக்கொண்டு, அன்புடனும் ஒரேநினைவுடனும் மனம் சிறிதும் கலங்காமல், ஒருநாளைக்கு முப்பத்தாறு உருவிதம் மனத்துக்குள்ளே சொல்லிக் கொண்டு உரு வேற்றி, (ஜெபம் செய்து) திருநீறுபூசிக்கொண்டு. முருகனை வணங்குக

Koviloor Digital Library

209–214 அஷ்டதிக்குளோர் ... . வாழ்வர்.

இங்ஙனம் கந்தர் சஷ்டி கவசத்தை முப்பத்தாறு உரு ஓதி, செபித்து, திருநீறணிந்து முருகனை வணங்குபவர்க்கு எட்டுத் திசைகளிலும் உள்ளவர்கள் வசியமாவர். எட்டுத் திசைக்குமுரிய இந்திரன், அக்கினி, இயமன், நிருதி வருணன், வாயு, குபேரன், ஈசானன் என்னும் தலைவர்கள் ஒருசேரவந்து அருள்செய்வர். பகைவரெல்லாரும் வந்து வணங்குவர். ஒன்பது கிரகங்களும் சந்தோஷமடைந்து நன்மைகளை அளிக்கும். புதிய மன்மதன் என்று சொல்லும்படி நல்ல அழகுபெறுவார்கள். எந்தநாளிலும் பதினாறு வயது உடையவர்கள்போல இளமையுடன் நிலைபெற்று வாழ்வார்கள்.

215–220 கந்தர்கை .... சங்காரத்தடி.

கந்தப் பெருமானின் திருக்கரத்தில் விளங்கும் வேல் போன்று பகையை அழிப்பதும் கவசம் போல் பாதுகாப்பதும் ஆகிய இதன் ஓர் அடியை முறைப்படி - பொருள் உணர்ச்சியோடு தியானிப்பவர்களுக்கு உண்மைநெறிகள் விளக்கமாகத் தெரியும். இக்கவச அடிகளைக் கண்களால் பார்த்தாலே பேய்களும் அவரைக் கண்டு மனம் நடுங்கி ஓடும். எல்லாவகையான பகைகளையும் அழிக்கக் கூடியதாகிய இச்சஷ்டிகவசத்தின் அடி தீயவர்களைப் பொடிப் பொடி ஆக்கிவிடும். நல்லோரது மனத்தில் தங்கி நடனம் ஆடும.

221–226 அறிந்தெனது ... . சேவடிபோற்றி.

என்மனம் அஷ்ட லட்சுமிகளில் வீரலட்சுமிக்கு விருந்தாக அமையட்டும். (என்மனத்தில் தங்குவாளாக.) சூரபதுமனை அழியும்படி துன்பப் படுத்திய கையால் இருபத்தேழுபேருக்கு அமுதத்தை மகிழ்ச்சியுடன் கொடுத்த குருபரனும் பழநிமலைமீது எழுந்தருளி இருப்பவனும் ஆகிய

Koviloor Digital Library

சிறுபிள்ளை வடிவினை உடைய முருகனின் சிவந்த திருவடிகளைப் போற்றித் துதிக்கின்றேன்.

227–230 எனைத்தடுத்து .... கோவே! போற்றி.

நான் தீயவழிகளில் போகாதபடி தடுத்து என்னை ஆண்டுகொள்க. எனது மனத்தில் தங்கிய அழகான வடிவம் பொருந்திய வேலவனே! போற்றி! தேவர்களின் சேனைக்குத் தலைவனாக விளங்கிய பெருமானே! போற்றி! வேடுவரின் வளர்ப்பு மகளாகிய வள்ளியின் மனத்தை மகிழச் செய்யும் தலைவனே! போற்றி.

231–234 திறமிகு .... வேளே! போற்றி.

வலிமை மிக்க அழகிய திருமேனியை உடையவனே! போற்றி. பகைவர்களுக்கு இடும்பையை (துன்பத்தைத்) தரும் வேலாயுதம் உடையவனே! பகைவர்முன் காட்டும் தருக்கு உடையவனே! போற்றி. கடப்ப மாலையை அணிந்தவனே! போற்றி. கந்தனே! வெட்சிப்பூ மாலையை அணிந்த குமரவேளே! போற்றி.

235–238 உயர்கிரி .... சண்முகா! சரணம்.

உயர்ந்த கந்தமாதனம் என்னும் மலையில் பொருந்திய பொன்னால் ஆகிய சபைக்குத் தலைவனே! மயில் மீது ஏறி நடனம் புரிபவனே! உன் திருவடி மலர்களே சரணம். 'ஓம் சரஹணபவ' என்ற ஆறெழுத்து மந்திரத்தின் வடிவமாக விளங்குபவனே! சரணம்! ஆறுமுகப்பெருமானே! சரணம்!

கந்தர் சஷ்டி கவசம்

தெளிவுரை முற்றிற்று.

Koviloor Digital Library

திருமுருகாற்றுப்படை

வெண்பாக்கள்

திருமுருகாற்றுப்படையின் பின்னர்ப் பிற்காலத்துச் சான்றோர் இயற்றியமைத்தனவாகக் காணப்பெறும் இனிய அரிய வெண்பாக்கள் பத்துள்ளன; அவை வருமாறு:-

குன்றம் எறிந்தாய் குரைகடலிற் சூர்தடிந்தாய்
புன்றலைய பூதப் பொருபடையாய் - என்றும்
இளையாய் அழகியாய் ஏறூர்ந்தான் ஏறே
உளையாயென் உள்ளத் துறை. 1

குன்றம் எறிந்ததுவும் குன்றப்போர் செய்ததுவும்
அன்றங் கமரரிடர் தீர்த்ததுவும் - இன்றென்னைக்
கைவிடா நின்றதுவுங் கற்பொதும்பிற் காத்ததுவும்
மெய்விடா வீரன்கை வேல். 2

வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல் - வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்பும் குன்றும்
துளைத்தவேல் உண்டே துணை. 3

இன்னம் ஒருகால் எனதிடும்பைக் குன்றுக்கும்
கொன்னவில்வேற் சூர்தடிந்த கொற்றவா - முன்னம்
பனிவேய் நெடுங்குன்றம் பட்டுருவத் தொட்ட
தனிவேலை வாங்கத் தகும். 4

Koviloor Digital Library

உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை ஒருவரையான் பின்செல்லேன் - பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்திவாழ் வே. 5

அஞ்சு முகந்தோன்றின் ஆறு முகந்தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சலென வேல்தோன்றும் - நெஞ்சில்
ஒருகால் நினைக்கின் இருகாலுந் தோன்றும்
முருகாஎன் றோதுவார் முன். 6

முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே - ஒருகைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான். 7

காக்கக் கடவியநீ காவா திருந்தக்கால்
ஆர்க்குப் பரமாம் அறுமுகவா - பூக்கும்
கடம்பா முருகா கதிர்வேலா நல்ல
இடங்காண் இரங்காய் இனி. 8

பரங்குன்றிற் பன்னிருகைக் கோமான்றன் பாதம்
கரங்கூப்பிக் கண்குளிரக் கண்டு - சுருங்காமல்
ஆசையால் நெஞ்சே அணிமுருகாற் றுப்படையைப்
பூசையாக் கொண்டே புகல். 9

நக்கீரர் தாமுரைத்த நன்முருகாற் றுப்படையைத்
தற்கோல நாடோறுஞ் சாற்றினல் - முற்கோல
மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளித்
தானினைந்த எல்லாந் தரும். 10


KOVILOOR ANDAVAR
A. No. 24157

Koviloor Digital Library

"அருள் நெறித் தொண்டர்"
[illegible]மணி
மீனாட்சி இல்லம்,
25, நான்காம் வீதி, முத்துப்பட்டணம்,
காரைக்குடி – 630 001.
கைபேசி. 9445436817

Koviloor Digital Library

தமிழகத்தில் மிகச்சிறந்த பதிப்பகம்

பரிசு பல பெற்ற பதிப்பகம்

ஆய்வு நூல்கள் அளிக்கும் பதிப்பகம்

புதுவகை நூல்கள் பதிப்பிக்கும் பதிப்பகம்

நாளும் வளரும் நல்ல பதிப்பகம்

அறிஞர் போற்றும் பதிப்பகம்

மணிவாசகர் பதிப்பகம்

சிதம்பரம், சென்னை - 1, மதுரை-1, கோவை - 1.